ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-4

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

**Practice Paper** | முன்னோடி வினாப்பத்திரம்

# Civic Education

# குடியியற் கல்வி



**Question Paper - I, II** | **வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்-தமிழ்)**

Nenasa
The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

*පැය තුනයි*
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

***வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.***

## குடியியற் கல்வி I

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கிரேக்கத்தின் எதென்ஸ் நகராட்சியின் பிரதான ஆட்சி நிறுவனமாக காணப்பட்டது

   (1) கிராமசபை (2) நகர சபை
   (3) பிரதேச சபை (4) மக்கள் மன்றம்

2. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களுள் ஒன்று

   (1) பிரஜைகளின் வருமான மார்க்கங்களில் ஏற்றத்தாழ்வு காணப்படல்.
   (2) குறித்த காலப்பகுதிக்குள் தேர்தலை நடாத்துதல்.
   (3) தற்கால அரசுகளில் நிலப்பரப்பு விசாலமானதாக காணப்படல்.
   (4) அரசினுள் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை காணப்படல்.

3. ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கையில் அரசினால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய பொறுப்பாக அமைவது

   (1) சமூக பாதுகாப்பையும், தனியார் நலன்களையும் பேணல்
   (2) நாட்டின் வளங்களை நியாயமாக பகிர்ந்தளித்தல்
   (3) சமத்துவம் எனும் மூலக்கொள்கையை பின்பற்றுவதை தவிர்த்தல்
   (4) வெளிப்படைத் தன்மையற்ற வகையிலான நிதிப் பயன்பாடு

4. சனநாயக ஆட்சி முறையில் பொதுமக்களிடம் காணப்படும் இறைமை அதிகாரத்தில் உள்ளடங்குவன

   (1) நிர்வாக அதிகாரம், அடிப்படைச் சட்டம், வாக்குரிமை
   (2) அடிப்படை மனித உரிமைகள், மனித உரிமைகள், நிர்வாக அதிகாரங்கள்
   (3) நிர்வாக அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை
   (4) அடிப்படைச் சட்டம், அடிப்படை உரிமைகள், நிர்வாக அதிகாரம்

5. நவீன அரசுகள் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்களுள் ஒன்றாக அமைவது

(1) பிராந்திய அரசுகள் பலப்படுவதைத் தடுத்தல்.
(2) ஒருமைப்பாடற்ற நிலையை ஏற்படுத்தல்.
(3) சர்வதேச பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
(4) நாட்டின் பரப்பு விசாலமானதாக காணப்படும் போது ஒரு மத்தியிலிருந்த நாட்டை நிர்வகிப்பது சிரமமாக இருத்தல்.

6. ”ஒரு மத்திய அதிகார பீடம் மாத்திரம் சட்டம் இயற்றும் உயர் அதிகாரத்தை கொண்டிருப்பது ஒற்றையாட்சியின் அடிப்படை பண்பாகும்“ எனும் வரைவிலக்கணத்தை முன்வைத்த பேராசிரியர்

(1) ஹரல்ட். J லஸ்கி
(2)ஏ.வி.டைசி
(3) ஜோன் ஒஸ்டீன்
(4) ஜொகான் கல்டுங்

7. அதிகாரத்தை பண்முகப்படுத்துகையில் அவதானிக்க கூடிய பிரதான பண்பாக அமைவது

(1) எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படல் .
(2) நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாத்தல்
(3) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெற்றுக் கொள்ளல்.
(4) அனைத்து தீர்மானங்களும் பிராந்திய அரசுகளால் மேற்கொள்ளப்படல்.

8.சர்வதேச உறவுகளின் போது இராஜதந்திர தொடர்புகளை பலப்படுத்துவதற்கு உதவும் காரணியாக அமைவது

(1) இருதரப்பு அரச தலைவர்களின் சந்திப்பு
(2) யுத்த பயிற்சி அளித்தல்
(3) மருந்து வகை போன்ற மனிதாபிமான உதவிகளை வழங்குதல்
(4) இராணுவ உதவி வழங்குதல்

9.உலகில் சமஷ்டி ஆட்சி முறை நிலவும் நாடுகளை மாத்திரம் கொண்ட விடையாக அமைவது

(1) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சுவிட்சர்லாந்து, இலங்கை
(2) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சுவிட்சர்லாந்து, பிரித்தானியா
(3) இந்தியா, பிரித்தானியா, இலங்கை
(4) சுவிட்சர்லாந்து, இந்தியா, ஐக்கிய அமெரிக்க குடியரசு

10.இலங்கையில் மாகாணசபையின் ஆளுநருக்குரிய அதிகாரம், பணியாக அமைவது

(1) அவசரகால நிலைமைகளின் போது முதலமைச்சரின் ஆலோசனையின்படி செயற்படல்
(2) மத்திய அரசுக்கும் பிரதேச சபைக்கும் இடையே இணைப்பாளராக செயற்படல்
(3) மாகாணசபையில் உரையாற்றலும் கொள்கைகளை அனுமதித்தலும்
(4) முதலமைச்சரை நியமித்தலும், ஆலோசனை வழங்கலும்

11.இலங்கையில் பன்மை பண்பாட்டு சமூகம் உருவாவதில் செல்வாக்கு செலுத்திய குடிப்பெயர்வு தொடர்பான காரணியாக அமைவது

(1) மகிந்த தேரர் உள்ளிட்ட குழுவினரின் வருகை
(2) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை
(3) உல்லாச பிரயாணிகளை கவரும் கடற்கரையோர பிரதேசங்கள் காணப்படல்
(4) சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்

12. மனித வளங்கள் உரிய வகையில் முகாமைத்துவம் செய்யப்படாமை காரணமாக சமூக நீதியை நிலைநாட்டுவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையில் செல்வாக்கு செலுத்தும் காரணி
    (1) அரச நிர்வாகம் வினைத்திறன் மிக்கதாக இருத்தல்
    (2) அரச நிர்வாகிகள் பொறுப்புடன் செயற்படல்
    (3) தனியார் துறையினர் தேசிய நலன்கருதி செயற்படல்
    (4) இலஞ்சம் மற்றும் ஊழல்கள் உயர்வடைந்து காணப்படல்

13. ரஷ்யா, சீனா, போலாந்து ஆகிய நாடுகளில் சமகாலத்தில் பின்பற்றப்படும் பொருளாதார முறை
    (1) முதலாளித்துவ பொருளாதாரம் (2) சந்தை பொருளாதாரம்
    (3) கலப்பு பொருளாதாரம் (4) சமதர்ம பொருளாதாரம்

14. உலகமயமாதல் இலங்கை மீது ஏற்படுத்தியுள்ள பாதகமான விளைவுகளுள் ஒன்று
    (1) தேசிய உற்பத்திக்கு அதிக கேள்வி உருவாதல்
    (2) பல்வேறு வலய ஒழுங்கமைப்புகள் ஒன்றிணைதல்
    (3) வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழில்நுட்பங்களின்வருகை
    (4) கைத்தொழில் நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் சுற்றாடல் பாதிப்புக்கள் அதிகரித்தல்

15. பேண்தகு அபிவிருத்தியின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணியாக அமைவ
    (1) எதிர்கால சந்ததியினருடன் இணக்கப்பாடற்ற நிலையை ஏற்படுத்திக் கொள்ளல்
    (2) வளங்களின் அபரிமிதமான நுகர்வைத் தடுத்தல்
    (3) மக்களின் பங்களிப்பை தவிர்த்தல்.
    (4) இரு தரப்பினரதும் தேவைகளை பூர்த்தி செய்தல்

16. இலங்கையின் அபிவிருத்திக்கான சவாலை வெற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை
    (1) ஏற்றுமதியை ஊக்குவித்தல்
    (2) வெளிநாட்டு கடன் உதவிகளை ஊக்குவித்தல்
    (3) மூளைசாலிகளின் வெளியேற்றத்தை ஊக்குவித்தல்
    (4) இறக்குமதியை ஊக்குவித்தல்

17. மோதல்களை தீர்க்கும் முறைகளுள் ஒன்றான கலந்துரையாடல் முறையின் பண்புகளில் ஒன்று
    (1) அதிக செலவு கொண்ட முறையாக காணப்படல்
    (2) ஒரு தரப்பினருக்கு மாத்திரம் வெற்றி - வெற்றி என்ற தீர்வு கிடைத்தல்
    (3) சட்டத்தின் தன்மைக்கேற்ப தீர்ப்பு வழங்கல்
    (4) முறைசாராத கட்டமைப்பை கொண்டிருத்தல்

18. தனிநபரினுள் ஏற்படும் உள முரண்பாடு, குடும்பத்தினுள் ஏற்படும் முரண்பாடு, வீட்டு வன்முறை என்பன எம்மோதல் வகைக்குள் உள்ளடங்கும்
    (1) வெளிப்படையான மோதல் (2) குடும்ப மோதல்
    (3) நுண்மையான மோதல் (4) தனிநபர் மோதல்

19. தனிநபர் ஒருவர் மற்றொரு தனிநபரின் வாழ்க்கைக்கு அல்லது சொத்துக்களுக்கு தீங்கிழைக்கும் போது நடைமுறைப்படுத்தப்படும் சட்டம்
    (1) சிவில் சட்டம் (2) குற்றவியல் சட்டம்
    (3) அரசியல் யாப்புச் சட்டம் (4) சூழல் சட்டம்

20. இலங்கையில் நடைமுறையில் உள்ள பொதுச் சட்டமாக அமைவது
    (1) சிவில் சட்டம்
    (2) உரோம டச்சு சட்டம்
    (3) தேச வழமைச் சட்டம்
    (4) முஸ்லிம் தனியார் சட்டம்

21.இலங்கையின் மாகாண மேல்நீதிமன்றத்தின் அதிகாரங்களுள் ஒன்று
(1) விருப்பாவன வழக்கு (2) பிரிவினை வழக்கு
(3) ஆலோசனை வழங்கும் நீதி அதிகாரம் (4) வர்த்தக பிரச்சினைகளை தீரத்தல்

22. தாமதமின்றியும் பக்கச்சார்பற்ற முறையிலும், நீதி நிலைநாட்டப்படாத போது ஏற்படக்கூடிய பாதகமான நிலைமையாக அமைவது
(1) நீதியை நிலைநாட்டுவதற்கு பொருத்தமான முறையை கையாளுதல்
(2) நாட்டினுள் நடைபெறும் குற்றச் செயல்கள் குறைவடைதல்
(3) நாட்டில் சட்டத்தின் சமநிலையும், நீதியும் சீர்குலைதல்
(4) மக்கள் மத்தியில் நீதிமன்றம், சட்டத்தின் மீதான மதிப்பு கூடுதல்

23. இலங்கையின் சட்டமூலமொன்று சட்டமாவதற்கு கையொப்பம் இடவேண்டிய நபர்
(1) சனாதிபதி (2) சபாநாயகர்
(3) பிரதம நீதியரசர் (4) பாராளுமன்ற செயலாளர் நாயகம்

24. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 13 ஆம் சீர்திருத்தத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட நீதி மன்றம்
(1) மாகாண மேல் நீதி மன்றம் (2) உயர் நீதி மன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் (4) நீதவான் நீதிமன்றம்

25. இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பதவி யாது?
(1) ஆளுனர் நாயகம் (2) பெயரளவு சனாதிபதி
(3) ஒம்புட்ஸ்மன் (4) கணக்காளர் நாயகம்

26. இலங்கையின் பொதுத்தேர்தலின் போது தேர்தல் தொகுதி ஒன்றாக கருதப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) பிரதேச சபைக்கு உரித்தான பிரதேசம் (2) மாகாணம்
(3) நகரசபைக்கு உரித்தான பிரதேசம் (4) மாவட்டம்

27. உயர் நீதிமன்றத்திற்குரிய அதிகாரம் ஒன்று அல்லாதது
(1) பாராளுமன்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
(2) சனாதிபதி தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
(3) மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
(4) ஆலோசனை வழங்கும் நீதி அதிகாரம்

28. இரண்டாம் குடியரசு யாப்பில் அடிப்படை மனித உரிமைகள் உள்ளடங்கியுள்ள உறுப்புரைகள்
(1) 10 -12 (2) 10- 14 (3) 10 - 16 (4) 10 - 18

29.”வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமை சுதந்திரமாகும்” இக்கூற்றினை முன்வைத்தவர்

(1) காணர் (2) லஸ்கி (3) G.D.H. கோல் (4) ரூசோ

30. சிறுவர் உரிமைகளை பாதுகாத்தலானது விசேட நோக்கங்கள் நான்கினை கொண்டுள்ளது. அவற்றை சரியாக காட்டும் விடைத் தொகுதி

(1) பாதுகாப்பு, உயிர்வாழ்தல், அபிவிருத்தி, பங்குபற்றல்
(2) அதிகாரம், அபிவிருத்தி, சமயத்தை பின்பற்றுதல், உயிர்வாழ்தல்
(3) கல்வி, உயிர்வாழ்தல், பங்குபற்றல், சுகாதாரம்
(4) பாதுகாப்பு, அபிவிருத்தி, சுகாதாரம், சமயத்தை பின்பற்றல்

31. சர்வதேச உறவுகளை பலப்படுத்திக் கொள்வதனால் ஏற்படும் விளைவுகளுள் ஒன்று

(1) புதிய தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படல்
(2) தொழினுட்ப அறிவு வீழ்ச்சியடைதல்
(3) அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்படல்
(4) சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படாதிருத்தல்

32. SAPTA, SAFTA ஆகிய வர்த்தக ஒப்பந்தங்களில் இணைந்துள்ள நாடுகள்
(1) ஆசியான் (2) சார்க் (3) ஒபெக் (4) பிம்ஸ்டெக்

33. அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் எதிர் கொள்ளும் பொதுவான சவால் ஒன்று
(1) பாதகமான சென்மதி நிலுவை
(2) அரசியல் உறுதிப்பாடின்மை
(3) சர்வதேச பயங்கரவாத பிரச்சினைகள்
(4) உள்நாட்டு வளங்களுக்கான உரித்தை வெளிநாட்டவர்கள் கொண்டிருத்தல்

34. அரசுகளுக்கிடையிலான சமாதானத் தொடர்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பிரதான காரணியாக அமைவது

(1) தூதரக சேவை (2) யுனிசெப்
(3) சர்வதேச நீதிமன்றம் (4) ஐரோப்பிய ஒன்றியம்

35. சர்வதேச தொடர்புகளை பேணுவதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம் ஒன்று அல்லாதது
(1) தமது அரசுக்கு தனியே பூர்த்தி செய்து கொள்ள முடியாதவற்றைப் பூர்த்தி செய்து கொள்ளல்
(2) அரசியல் பொருளாதார, கலாசார, சமூகத்துறைகளினூடே குறுகிய தொடர்புகளை ஏற்படுத்தல்
(3) பிரதான நாடுகளின் அதிகார பிரயோகத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளல்
(4) பாதுகாப்புக் கொள்கைகள் மூலம் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தடுத்தல்

36.பேண்தகு அபிவிருத்தி தொடர்பில் 3R எண்ணக்கருவில் அடங்காத ஒன்றாக கருதப்படுவது
(1) அதிகரிப்பு (2) குறைத்தல்
(3) மீளப்பயன்படுத்தல் (4) மீள் சுழற்சிக்கு பயன்படுத்தல்

37. 19 ஆம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் சனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்க கூடிய சந்தர்ப்பமாக அமைவது
(1) பாராளுமன்றம் தெரிவாகி குறைந்தது 1 வருடத்தின் பின்னர்
(2) பாராளுமன்றத்தை கலைக்கும்படி பிரதமர் கோரும் பட்சத்தில்
(3) சனாதிபதி விரும்பும் சந்தர்ப்பங்களில்
(4) பாராளுமன்றம் தெரிவாகி குறைந்தது நான்கரை வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னர்

38. 19 ஆம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனமாக அமைவது

(1) பாராளுமன்றம் (2) அரசியலமைப்பு நீதிமன்றம்
(3) அரசியலமைப்பு பேரவை (4) தேசிய பெறுகை ஆணைக்குழு

39. நிரல் “அ” வில் தரப்பட்டுள்ள மோதல்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகளை நிரல் “ஆ” உடன் சரியாக தொடர்பு படுத்தும் போது கிடைக்கும் விடையாக அமைவது

| “அ” | “ஆ” |
|---|---|
| 1. இனப்பாகுபாடு | A அயர்லாந்தின் மதப்பிரிவு யுத்தம் |
| 2. அரசியல் | B சோமாலிய எத்தியோப்பிய பிரச்சினை |
| 3. சமூக பொருளாதார நிலை | C ருவாண்டாவின் டுட்சி, ஹுடு இன மோதல் |
| 4. சமய பிரிவு மோதல் | D உக்ரைன், ரஷ்ய மோதல் |

(1) ACBD (2) ACDB (3) CDBA (4) DCBA

40. வளிமண்டலம் மாசடையும் வழிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன

A - ஆகாய விமானப் பயன்பாடு
B - புழுதிப் புயல்
C - காடழிப்பு
D - எரிமலை
E – குப்பை கூழங்கள்
F – எரிமலை வெடிப்பு

மேற்குறிப்பிட்டவற்றில் செயற்கை முறையில் வளி மாசடைதலை குறிக்கும் தொகுதி

(1) ACD (2) ACE (3) ADF (4) CDE

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

62 | T | I, II

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| குடியியற் கல்வி | I, II |
| Civic Education | I, II |

# குடியியற் கல்வி II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், வேறு நான்கு** வினாக்கள் உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

01

(i) நேரடி சனநாயகம் செயற்படுத்தப்பட்ட கிரேக்கத்தின் நகர அரசுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(ii) இலங்கையில் பிரதேச நிர்வாக அலகுகளுக்கு, அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்வதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(iii) நல்லாட்சியின் அடிப்படை அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(iv) உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் பிரதான நுட்பங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக

(v) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(vi) உலகமயமாதலை எதிர் கொள்வதற்கு நாடுகள் இணைந்து உருவாக்கிக் கொண்டுள்ள அமைப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(vii) மோதல் தீர்வின்போது மீட்பாளரிடம் காணப்படவேண்டிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(viii) சட்டமா அதிபரின் கடமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(ix) இலங்கையில் சூழல் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக

(x) இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கும் அமைப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 x 10=20 புள்ளிகள்)

02 சனநாயக ஆட்சியின் கீழ் ஒரு நாட்டின் அரசாட்சியானது அரசியல் யாப்பிற்கிணங்கவே நடைபெறும்

(i) அரசியல் யாப்பொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) சனநாயக ஆட்சி முறை இடம்பெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) சனநாயக ஆட்சி முறையின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) அப்பண்புகளுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 02)

03. “ஒரு நாட்டின் ஆட்சியானது சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுமாயின் அது சட்டத்தின் ஆட்சி ஆகும்”

(i) ஜீ. மார்சல் என்பவர் குறிப்பிட்டுள்ளதன்படி சட்டவாட்சியில் செல்வாக்கு செலுத்தும் **இரண்டு** பண்புகளையும் குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) நீதித்துறை சுதந்திரத்தை பேணும் வகையில் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ள கொள்கைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) தாமதமின்றியும் பக்கச் சார்பின்றியும் நீதி நிலைநாட்டப்படாத போது ஏற்படக் கூடிய பாதகமான நிலைமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) அவற்றுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும் (புள்ளிகள் 02)

04 “எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்திடம் குவிந்திருப்பின் அது ஒற்றையாட்சி முறையாகும்”

(i) நவீன உலகின் ஒற்றையாட்சி நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) ஓற்றையாட்சியின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) சமஷ்டி அரசுகளின் புதிய போக்குகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) மேற்குறிப்பிட்ட புதிய போக்குகளில் ஏதேனும் **ஒன்றினைப்** பற்றி சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 02)

05 மனிதர்களால் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் சமூக அமைப்புக்கள் ஒழுங்கமைந்துள்ள விதமே பொருளாதார முறை என அழைக்கப்படுகின்றது.

(i) முதலாளித்துவ பொருளாதார முறையின் அடிப்படை பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) சமகாலத்தில் செயற்படுகின்ற நவ லிபரல்வாத பொருளாதார முறையின் பிரதான பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) மேற்குறிப்பிட்ட பண்புகளில் **ஒன்றினைப்** பற்றி விளக்குக (புள்ளிகள் 02)

06 சிறுவர்களுக்கு அவர்களது பிள்ளைப் பருவத்தில் கிடைக்க வேண்டிய உரிமைகளை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதபோது அவர்களது பூரண வளர்ச்சியில் தடையேற்படும்

(i) சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 02)

07 அரசுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மனிதனின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும்.

(i) சர்வதேச உறவுகள் இடம் பெறும் **இரு** முறைகளையும் குறிப்பிடுக (புள்ளிகள் 02)

(ii) சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(iii) (a) சர்வதேச வர்த்தகத்தின் போது பயன்படுத்தப்படும் பிரதான பண அலகுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 03)

(b) வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய சர்வதேச அமைப்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (புள்ளிகள் 02)

*****